# திருமறைத்தீபம்

**THE BIBLE LAMP**

மலர் 1 | ஜனவரி 1995 | இதழ் 1

## ஆசிரியரின் மடல்

அன்புள்ள வாசகர்களுக்கு,

கிறிஸ்துவின் நாமத்தில் என் நல்வாழ்த்துக்கள். இதைப்படிக்கின்றபோது, சஞ்சிகையோடு சஞ்சிகையாக இன்னொரு சஞ்சிகையா எனற எண்ணம் உங்களுக்கு எழலாம். எத்தனையோ சஞ்சிகைகள் இருக்கின்ற நேரத்தில் ஏன் இன்னொன்று என்ற வினாவிற்கு நான் நிச்சயம் பதிலளித்தேயாக வேண்டும். வெறுமனே, ஏற்கனவே இருக்கின்ற கூட்டத்தோடு கூட்டமாக நாமும் சேர வேண்டுமென்ற நோக்கத்துடன் அல்லாமல், கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சியையும், தெளிவான வேத விளக்கங்களைப்பெற்று, கர்த்தருடைய பிள்ளைகள், அவருடைய கிருபையிலும், அறிவிலும் வளரவேண்டுமென்ற நோக்கத்தையும் மனதில் கொண்டே இந்தச்சிறு சஞ்சிகை தொடங்குகிறது. காலாண்டிதழாக வெளிவரப்போகும் 'திருமறைத்தீபம்', நான் இதுவரை தமிழ்கூறும் நல்லுலகில் சந்தித்த கிறிஸ்தவத் தமிழன்பர்களை நாடி வரும். வேதத்தில் தெளிவான நல்அறிவு பெறவேண்டும் என்ற அடங்காத்தாகம் கொண்ட, எனக்கு அறிமுகமான பல நண்பர்களின் பயன்கருதியே இச்சிற்றிதழ் வெளியிடப்படுகிறது.



மிகுந்த ஜெபத்தோடு, கர்த்தருடைய மகிமைக்காக வெளிவரும் இசஞ்சிகை இன்னுமொரு பெருநோக்கையும் கொண்டுள்ளது. கிறிஸ்தவம் என்ற பெயரில் தமிழர்கள் மத்தியில் தவறான பல கொள்கைகள் உலவி வரும் இந்நாட்களில், அநேகருக்குத் தெரிந்திராத, சிலருக்கு மட்டுமே பரிச்சயமான, 'கிருபையின் போதனைகள்' (The Doctrines of Grace) என்று அழைக்கப்படுகின்ற வேத சத்தியங்களையும் எல்லோரும் அறிந்து பயனடையவேண்டும் என்பதும் இச்சஞ்சிகையின் நோக்கமாகும்.

இந்த முதலாவது இதழில், கிறிஸ்தவர்கள் இன்று சந்திக்கும் மிகமுக்கியமான ஒரு பிரச்சனையைக்குறித்து ஆராயப்போகிறோம். பல நாடுகளிலும், கிறிஸ்தவர்கள் மத்தியில் புகுந்து, அவர்களைக் கறையான் போல் அரித்துக் கொண்டிருக்கும் ஒரு இயக்கம்தான் 'கெரிஸ்மெட்டிக்' (Charismatic) இயக்கம். இவ்வியக்கத்தின் தவறான போதனைகளுக்கு தம்மை ஒப்புக்கொடுத்து வீணாய்ப்போனவர்கள் அநேகர். பல நல்ல கிறிஸ்தவர்களும்கூட, உணர்ச்சிகளுக்கு உணவிட்டு மயக்கும் இவ்வியக்கத்தின் வழிமுறைகளுக்கு தம்மை ஒப்புக்கொடுத்து அழிவைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வியக்கம் பற்றிய, வேதத்தின் அடிப்படையில் அமைந்த இவ்வாய்வுக்கட்டுரை வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். முடிந்தால் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். உங்கள் ஒவ்வொருவரையும் நேரிலும், இப்போது இவ்விதழ் மூலமும் சந்திக்கக் கர்த்தர் எனக்குக் கொடுத்துள்ள வாய்ப்பிற்காக அவருக்குத் தொடர்ந்து நான் நன்றி தெரிவிக்கிறேன். படியுங்கள். பயனடையுங்கள். பதில் எழுதுங்கள்.

என்றும் உங்கள் நண்பன்,
R. பாலா

## திருச்சபை வரலாறு

## ஏன்? ஏன்? ஏன்?

அநேகர் இன்று திருச்சபை வரலாறே அறியாது இருக்கின்றார்கள். தேவ பிள்ளைகள் மட்டுமன்றி தேவ ஊழியர்கள்கூட திருச்சபை வரலாறு தெரியாது திருச்சபை ஊழியத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். வேதம் மட்டுமே தெரிந்தால் போதும் என்று விவாதிப்பவர்கள், அவ்வேதம், தேவன் இவ்வுலகத்தில் செய்த காரியங்களின் வரலாற்றைத்தான் விளக்குகின்றது என்பதை உணரா திருக்கிறார்கள். நாம் வணங்கும் தேவன் வரலாற்றின் தேவனாக இருப்பதால், உலக வரலாற்றிலிருந்து அவரைப் பிரித்துவிட முடியாது.

திருச்சபை வரலாற்று அறிவு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நிச்சயம் அவசியம். அவ்வறிவைப்பெற்றுக் கொள்பவன் கர்த்தரை மேலும் தன் வாழ்க்கையில் மகிமைப்படுத்தக் கூடியவனாக இருக்கிறான்.

திருச்சபை வரலாற்றை நாம் ஏன் அறிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கீழ்வரும் ஆறு காரணங்களும் விளக்குகின்றன.

(கடைசிப் பக்கம் பார்க்க)

### இவ்விதழில்


- ஆசிரியரின் மடல்
- திருச்சபை வரலாறு ஏன்?
- 'கெரிஸ்மெட்டிக்' இயக்கம்
- கேள்வி? பதில்!
- புத்தக விமர்சனம்
- மெய்யான ஐக்கியம்

# 'கெரிஸ்மெட்டிக்' இயக்கம்

## வேதாகமத்தின் அடிப்படையிலான ஓர் ஆய்வு

**இன்று உலகம் முழுதும் கிறிஸ்தவர்களைக் குழப்பிக்கொண்டிருக்கும் 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தின் தோற்றத்தையும், போதனைகளையும், திருமறையின் அடிப்படையில் ஆராயும் இக்கட்டுரை, அதன்பிடியில் அகப்பட்டுத் தத்தளிப்பவர்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் பயன்படும் என்று நம்புகிறோம். - ஆசிரியர்.**

இன்று உலகெங்குமுள்ள பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்களைப் பாதித்து, அலைக்களித்துக் கொண்டிருக்கும் இயக்கம்தான் 'கெரிஸ் மெட்டிக்' (Charismatic) இயக்கம் என்று பொதுவாக அழைக்கப்படும் ஓர் இயக்கம். இவ்வியக்கம் இந் நூற்றாண்டிலே தோன்றி, இன்று உலகின் பல நாடுகளில் வேரூன்றி, கிறிஸ்தவர்களைக் குழப்பியடித்துக் கொண்டிருக்கின்றது. இதனை 'நியோ-பெந்தக்கொஸ்தே' இயக்கம் (*Neo-Pentecostalism*) என்ற பெயரிலும் அடையாளம் காணலாம். *1900* ங்களில் ஆரம்பித்த 'பெநதகொஸ்தே' இயக்கத்திலிருந்து 'நியோ-பெந்தக்கொஸ்தே' இயக்கம் உருவாகியது. ஏப்ரல் 3, 1960ம் ஆண்டில், கலிபோர்னியாவின் ஒரு 'எபிஸ்கொபெல்' சபையைச் சேர்ந்த 'டெனிஸ் பெனெட்' என்ற போதகர், தன் சபையில், தான் 'பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப்' பெற்றுக்கொண்டதாகச் செய்த அறிவிப்பைத் தொடர்ந்து இவ்வியக்கும் ஆரம்பமானது. இதன் ஆரம்ப வளர்ச்சிக்கு தீமோஸ் சகாரியன், ஓரல் ரொபட்ஸ் ஆகியோரால் அமைக்கப்பட்ட பூரண சுவிசேச வர்த்தக சர்வதேச ஐக்கியமும் பெருந்துணையாக இருந்தது. இவ்வமைப்பு எவ்வித வேதப்போதனையையும் அளிக்காமல், வெறும் அனுபவ சாட்சிகளை வைத்தே வளர்ந்தது.

அன்றுமுதல் காட்டுத்தீபோல் அமெரிக்காவின் எல்லா சபைகளிலும் இவ்வியக்கம் பரவத்தொடங்கியது. உலகம் முழுதுமுள்ள சபைகளிலெல்லாம் இன்று இதன் பாதிப்பை நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. ஜோன் விம்பர், யொங்கி சோ போன்றோர் இவ்வியக்கத்தோடு தொடர்புடைய பிரபலமான புள்ளிகள். தனக்கென்று ஒரு உறுதியான, தெளிவான போதனையைக் கொண்டிராத இவ்வியக்கம், ஒரு சமயக்கிளையாக (*Denomination*) செயல்படாமல், எல்லா சமயக்கிளைகளிலும் பரவித் தனது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இன்று 'கெரிஸ்மெட்டிக் மறுமலர்ச்சி' என்ற பெயரிலும் உலவிவரும் இவ்வியக்கம், வேதத்திற்கே புறம்பான பல புதுப்போதனைகளையும் உருவாக்கி எவ்வித கட்டுப் பாடுமில்லாமல் காட்டாற்றைப்போல ஓடிக் கொண்டிருக்கின்றது.

### ஓர் ஆய்வு மதிப்பீடு

இவ்வியக்கம் வேதத்தின் அடிப்படையில் அமைந்த ஓர் இயக்கமா? இதன் முக்கிய தன்மைகள் என்ன? இவ்வியக்கத்தோடு நமக்குத் தொடர்பு இருக்கவேண்டியது அவசியமா? இத்தகைய வினாக்களுக்கான விடையை நாம் ஆராயந்து அறிவது அவசியம். வேதமே பூரணமானதும், போதுமானதுமான கர்த்தருடைய வார்த்தையாக இருப்பதால், அனைத்துக்காரியங்களையும் பற்றிய அதன் முடிவே இறுதியானதாக எற்றுக்கொள்ளப்படவேண்டும். 'வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்' (யோவான் 5:39) என்று இயேசு சொன்னார். 2 திமோத்தேயு *3:16-17*வரையிலான வசனங்கள், வேதத்தின் அதிகாரத்தையும், அதன் போதுமான தன்மையையும் குறித்துத் தெளிவாகத் தெரிவிக்கின்றன. ஆகவே, வேதத்திற்குப் புறம்பான காரியங்களின் அடிப்படையில் அல்லாமல், வேதத்தை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு இவ்வியக்கத்தைக் குறித்து நாம் ஆராயவேண்டும். அந்த அடிப்படையில் ஆராய்கின்ற போது, இவ்வயக் கத்தைக்குறித்த மூன்று முக்கியமான உண்மைகளை நாம் தெளிவாக அவதானிக்க முடிகின்றது. வாசகர்கள் இவற்றை ஜெபத்தோடு வேதத்தின் மூலம் ஆராய்ந்து, தங்கள் சுய முடிவிற்கு வரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

### 1. இவ்வியக்கம் வேதாகமத்தின் போதனைகளின் அடிப்படையில் அல்லாமல் வெறும் உணர்ச்சிகளையும், அனுபவத்தையுமே மையமாகக்கொண்டு உருவாகியது.

#### இதன் ஆரம்பமே அனுபவரீதியானது

ஏற்கனவே நாம் பார்த்ததுபோல இவ்வியக்கத்தின் ஆரம்பமே அனுபவத்தைச்சார்ந்துதான் எழுந்தது. பரிசுத்த ஆவியைப்பற்றிய தவறான நம்பிக்கையால் உணர்ச்சி வசப்பட்டு, இல்லாத ஒன்றை பெற்றுக்கொண்டதாகக்கூறி ஏற்பட்டது தான் இவ்வியக்கம். நமது எல்லா அனுபவங்களும் வேதாகமத்தினால் பரிசோதிக்கப்பட வேண்டுமென்பது மறுக்கமுடியாத ஒரு திருமறை விதி. அதுமட்டுமல்லாது, வேதசத்தியங்களையே, நாம் அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும் திருமுறையின் போதனை. அப்படியிருக்க, இத்தெளிவான போதனைகளையெல்லாம் புறக்கணித்து, வெறும் உணர்ச்சிவசப்படுத்தும் வேதத்திற்குப் புறம்பான அனுபவங்களை மட்டும் நாடி, அவற்றைப் பெற்றுக்கொண்டதாக, இவ்வியக்கத்தார் தம்மைத் திருப்திப்படுத்திக்கொள்வது மட்டுமன்றி மற்றவர்களையும் திருமறைக்கு எதிராகத் திருப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

#### சொந்த அனுபவத்தைச்சார்ந்த போதனை


இவ்வியக்கம் 'பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு' அபிசேகத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. ஆவியின் அவ்வனுபவத்தை எப்படிப் பெற்றுக்கொள்வது என்பதை, இவ்வியக்கத்தைச் சேர்ந்த பலரும் பலவிதமாகப் போதிக்கிறார்கள். வேதாகமத்தில் காணப்படாத, அதற்கு எதிரான இப்போதனையை, அவர்கள், எப்போதும் ஒரே நிலையில் இருக்காத, தம் சொந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே ஏற்படுத்தினார்கள். உணர்ச்சிகளுக்கு மட்டும் தூபமிட்டு, உணவூட்டி வருகின்ற இத்தகைய

போதனைகளை இனங்கண்டு கொள்ள வேண்டுமென்று கர்த்தர் தன் வார்த்தையிலே தெரிவிக்கிறார். மத்தேயு 7:13-24ல் தேவன் இதைக்குறித்துத்தான் எச்சரிக்கை செய்கிறார். அற்புதங்கள் செய்கிறவனும், பிசாசு விரட்டுகிறவனும் அல்ல, பரலோகத்தில் இருக்கின்ற பிதாவின் சித்தப்படி (திருமறையே அவரது சித்தத்தைத் தெரிவிக்கின்றது) செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான் என்று இயேசு சொன்னார். அனுபவம் மட்டும் சோறு போடாது, எந்த அனுபவமும் கர்த்தரை மகிமைப்படுத்தும் விதத்தில், திருமறையின் வழி முறைகளின்படி அமையவேண்டும் என்பதை இவ்வியக்கத்தார் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்.

**2. இவ்வியக்கம் வேதாகமமே பூரணமானதும், அனைத்துக் காரியங்கள் மீதும் சர்வ அதிகாரமுள்ளதும், போதுமானதுமானது, என்ற உண்மையை ஏற்று, அதை உறுதியோடு பின்பற்றுவதில்லை.**

*வேதம் பூரணமானதும், போதுமானதுமானது.*

இவ்வியக்கத்தில் நாம் அவதானிக்கும் இன்னுமொரு முக்கிய காரியம் என்னவேனில், இவர்கள் திருமறையே சர்வஅதிகாரமுள்ள, கர்த்தருடைய, பூரணமானதும், போதுமானதுமான வார்த்தை என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களில் பலர் திருமறையை நாள்தோறும் பயன்படுத்திய போதும், அது கர்த்தருடைய வார்த்தைதான் என்று நாக்கூசாமல் சொல்லத்தயங்காத போதும், உண்மையில் அதன் போதனைகளைச் சரிவரக்கவனிப்பதோ அதன் வழிகளின்படிமட்டும் நடக்க முற்படுவதோ இல்லை. இதுவே, இவ்வியக்கத்தைக் காட்டிக்கொடுக்கும் பேருண்மையாக இருக்கின்றது.




இவ்வுலகில் இரட்சிப்புக்கும், கிறிஸ்துவ வாழ்க்கைக்கும், தேவையான அனைத்தையும் தரக்கூடியதாக திருமறை மட்டுமே உள்ளது (2 பேதுரு 1:3). ஆண்டவராகிய கர்த்தர் வார்த்தையின் மூலம் மட்டுமே நம்மோடு பேசுகிறார். திருமறையே தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதற்கு உதவியாக நாம் திருமறைக்கு வெளியில் உள்ள எதையும் நாடிப்போகவேண்டிய அவசியமே இல்லை. திருமறையே எல்லாவற்றின் மேலும் சர்வ அதிகாரமுடையது (2 திமோத்தேயு 3:16-17). இத்தகைய பெருந்தன்மைகளைக் கொண்ட திருமறை போது மானதாகவும் உள்ளது (சங்.19). அதாவது, இவ்வுலகில், ஒரு மனிதனுக்கு ஆன்மீக வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் தரக்கூடியதாக திருமறையை மட்டுமே தேவன் தந்திருப்பதால், அதுவே அக்காரியங்களின் நிறைவேற்றுதலுக்குப் போதுமானதாக இருக்கின்றது. ஆனால், 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இதனை நடைமுறையில் எற்றுக் கொள்வதில்லை. திருமறையைக்குறித்த இந்த அடிப்படை உண்மையைப் புரிந்து, ஏற்றுக் கொள்ளாவிட்டால் கிறிஸ்துவுக்குள்ளான அறிவைப் பெற்று, கிறிஸ்தவ வாழ்க்கையை ஒருவன் சரிவர வாழ்ந்து விட முடியாது.

*வேதமே வேதத்திற்கு விளக்கமளிக்கின்றது.*

அதுமட்டுமல்லாது, 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் திருமறையை சரிவர விளங்கி அறிந்து கொள்வதில்லை. திருமறையை விளங்கிப் புரிந்துகொள்ள, திருமறைக்குள்ளாகவே ஆண்டவராகிய கர்த்தர் தந்துள்ள விதிமுறைகள் அனைத்தையும் அலட்சியப்படுத்தி, தம்மனம் போனபோக்கில் அதற்கு விளக்கம் கொடுத்துத் தம்மையும், பிறரையும் ஏமாற்றி வருகிறார்கள். வேதமே வேதத்தை விளக்குகின்றது என்ற பேருண்மையை மறந்து தமது உணர்ச்சிகளுக்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றபடி வேத விளக்கமளிக்க முற்படுகின்றார்கள். வேதவசனங்களுக்கு, அவை காணப்படும் சந்தர்ப்பங்களை ஆராயாமல், பொருள்கூற முற்படுகிறார்கள். திருமறையை 'அலாவுதீனின் அற்புத விளக்கைப்' போலத் தாம் நினைத்த காரியங்களை உடனடியாகச் செய்யும், ஒரு மந்திரவித்தை செய்யும் புத்தகம்போல் பயன்படுத்துகிறார்கள். இதை அவர்களுடைய, 'பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அபிஷேகம்', அந்நியபாஷை பேசுதல், தீர்க்கதரிசனம் சொல்லுதல், பிசாசு விரட்டுதல் போன்றவற்றைக் குறித்த போதனைகளிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது.

**3. இவ்வியக்கத்தின் போதனைகளும் வேதாகமத்தின் அடிப்படையில் அமைந்தவையல்ல.**

இவ்வியக்கத்தின் போதனைகளை நாம் வேதத்தோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்கும்போது, வேதத்தைவிட்டு எவ்வளவு தூரம் இவ்வியக்கம் விலகி இருக்கிறதென்று அறிந்துகொள்ள முடிகின்றது.

*பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அபிஷேகம்*

இப்போதனை இவ்வியக்கத்தின் இறையியலின் முக்கியமான அம்சமாகும். சிலவேளைகளில் இப்போதனையை 'இரண்டாவது அனுபவம்' என்றும் அழைப்பார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை, ஒருவர் தமது ஆண்டவராக அறிந்துகொண்ட பின்பு, அவரது முழு ஆசீர்வாதத்தையும் அடைய, பரிசுத்த ஆவியின் ஈவாக அவரது 'திருமுழுக்கு அபிஷேகத்தை' இரண்டாம் அனுபவமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இவ்வியக்கம் போதிக்கிறது. இவ்விரண்டாம் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாக ஒருவர் அந்நியபாஷையில் பேச வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

'இவ்விரண்டாம் அனுபவத்தைப்' பெற்றுக் கொள்ள உதவும் பல வழிமுறைகளையும் இவ்வியக்கம் போதிக்கின்றது. ஆரம்பகால 'பெந்தகொஸ்தே' இயக்கத்தினர், இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ள 'காத்திருப்புக் கூட்டங்களை' நடத்தினார்கள். இக்கூட்டங்களில் மக்கள் பலமணிநேரம் ஜெபத்தோடு, கடுமுயற்சியுடன் இதற்காகக் காத்திருப்பது வழக்கம். இதைப்பெற்றுக்கொண்டதன் அடையாளமாக அந்நியபாஷை பேச வேண்டும் என்றும் இவர்களால் நம்பப்பட்டது.

'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தார் 'காத்திருப்புக் கூட்டங்களை' நடத்தாவிட்டாலும், புதிதாக மனந்திரும்பியவர்களை, இவ்வனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாகத் தூண்டுகிறார்கள். இவ்வனுபவத்தை நாடுகிறவர்களின் மனதையும், உணர்ச்சிகளையும் பாதித்து தம்வயப்படுத்தும் முறையில் இவர்களுடைய கூட்டங்கள் அமைகின்றன.

இக்கூட்டங்களில் ஆவியின் பெயரால் 'பல்டியடித்தல்', உணர்ச்சி வசப்பட்டு கட்டுக்கடங்காமல் அலறுதல், திடீரென நிலத்தில் வீழ்தல், பிசாசு பிடித்ததுபோல் ஆடுதல் ஆகியவற்றைப் பொதுவாகக் காணலாம்.

இவ்வனுபவத்திற்கு அடிப்படையாக இவர்கள் பயன்படுத்தும் வசனம், அப்போஸ்தலர் நடபடிகள் *2:38* ஆகும். இங்கே 'பேதுரு, அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்' எனக்கூறுவதைப் பார்க்கிறோம். இவ்வியக்கப் போதகர்கள், இவ்வசனத்தைப்பயன்படுத்தி, ஒருவர் இயேசுவுக்குள் நீதிமானாக்கப்படுகின்றபோது, ஒருவேளை பரிசுத்த ஆவியை அவர் பெற்றுக் கொள்ளாமலும் போகலாம் என்று போதிக்கிறார்கள். மனந்திரும்பும்போது, பொதுவாக இரண்டுமே ஒருவருடைய வாழ்வில் நிகழும் என எதிர்பார்த்தாலும், அவ்வாறு நிகழாமலும் போகலாம் என்று விளக்கமளிக்கிறார்கள். ஆகவே, மனந்திரும்பி, நீதிமானாக்கப்பட்ட ஒருவர், பரிசுத்த ஆவியைப்பெற்றுக்கொள்ள மேலும் சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது இவர்களுடைய போதனை.

ஆனால் திருமறை இதற்கு எதிரானதைத்தான் சொல்கிறது. பவுல் அப்போஸ்தலன், ரோமர் *8:9*ல் 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல' என்று அருதியிட்டுச் சொல்கிறார். பரிசுத்த ஆவியைப்பெற்றுக் கொள்ளாமல் ஒருவரும் கிறிஸ்தவனாக முடியாது என்று திருமறை தெளிவாகக்கூறுகின்றது. இதையே, மறுபடியும் பவுல், எபேசியருக்கு எழுதிய நிருபத்தில், *1:13*ல், நீங்கள் 'விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்' என்று கூறுகிறார். ஆகவே, கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே ஒருவருக்கு பரிசுத்த ஆவியானவர் ஆண்டவரால் அளிக்கப்பட்டுவிடுகிறார். ஆகவே, கிறிஸ்தவன், தான் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ள பரிசுத்த ஆவியை மறுபடியும் தேடி அலைய வேண்டிய அவசியமில்லை.



### அந்நியபாஷை பேசுதல்

'கெரிஸ்மெட்டிக் இயக்கத்தின் வாதத்திற்குரிய ஒரு பயிற்சி அவர்களுடைய அந்நியபாஷை பேசும் பழக்கம்தான். இதனால் இவ்வியக்கமே 'அந்நியபாஷைகள் இயக்கம்' என்ற பெயரையும் பெற்றுள்ளது. இவ்வியக்கத்தின் தலைவர்கள் அந்நியபாஷைகள்குறித்து ஒரேவிதமான கருத்தைக்கொண்டிருக்காமல் வெவ்வேறான விளக்கங்களைக்கொடுத்து வருகிறார்கள். அவர்கள் மத்தியிலேயே, அந்நியபாஷை உண்மையில் எத்தன்மை வாய்ந்தது என்பது குறித்து கருத்து வேறுபாடு நிலவுகிறது.

அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரத்தைவைத்து பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு அபிஷேகத்தை ஒருவர் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாகத்தான் அந்நிய பாஷை கிடைக்கின்றது என்று இவர்கள் போதிக்கின்றார்கள். ஆனால், பெந்தகொஸ்தே நாளில் அப்போஸ்தலரோடு இருந்தவர்கள் அந்நியபாஷையில் மட்டும் பேசாமல் வேறுபல அற்புதங்களையும் சந்தித்தார்கள் என்று அறிகிறோம். அதுமட்டுமல்லாது, இன்று அந்நிய பாஷை என்று பலர் கூறுவது, புதிய ஏற்பாட்டுக்காலத்து அந்நியபாஷையைவிட வித்தியாசமானதாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பலர் செய்துள்ள ஆய்வின்படி, இவை தெளிவான இவ்வுலக மொழிகளாக அல்லாமல், புரிந்துகொள்ள முடியாத வெறும் அலரல்களாக உள்ளன. இன்று இவ்வியக்கத்தார் தாம் பேசும் அந்நியபாஷையை, 'மனிதவர்க்கமே இதுவரை அறிந்திராத தெய்விகத் தன்மையுள்ள ஒரு மொழி' என்று கூறுகிறார்கள். இதைப்பெற்றுக்கொள்ள இவர்கள் கடைப்பிடிக்கும் பல வழிமுறைகளும்கூட புதிய ஏற்பாட்டுக்காலத்தைவிட வித்தியாசமானதாக இருக்கின்றது.

இக்கட்டுரை ஆசிரியர் இங்கிலாந்து நாட்டில் ஒருமுறை, இவ்வியக்கத்தாரின் கூட்டத்திற்கு ஒரு நண்பரோடு போய் அவர்கள் செய்யும் காரியங்களை அவதானித்தார். அமெரிக்க நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு போதகர் அன்று அந்நியபாஷை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு, அவர்கள் அதைப்பெற்றுக்கொள்ள தன்னால் உதவி செய்யமுடியும் என்று கூறி பலரை முன்னால் வரவழைத்தார். அவ்வாறு முன்னால் போன ஒரு பெண்ணால் அந்நிய பாஷை பேச முடியவில்லை. உடனே அந்தப் போதகர் கூட்டத்தைநோக்கி, 'அந்நியபாஷை பேசமுடிந்தவர்கள் முன்னால் வாருங்கள்' என்று அழைத்தார். அவ்வாறு வந்தவர்களைப்பார்த்து அப்போதகர் அந்நியபாஷையில் பேசும் படியாகச் சொன்னதோடு, அந்தப் பெண்ணையும், அப்படிப் பேசுபவர்களைப் பின்பற்றி அதேமுறையில் பேசும்படியாகத் தூண்டினார். அப்பெண்ணால் தொடர்ந்தும் பேச முடியாமற்போக, அமெரிக்கப் போதகர் அப்பெண்ணைப் பிடித்து ஆட்ட, அவர் வியர்வை வடியக்களைப்படைந்து நிலத்தில் வீழ்ந்தார். இறுதிவரை அந்தப்பெண்ணால் அந்நிய பாஷையில் பேசமுடியவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இம்முறையில் எவருமே அந்நிய பாஷையைப் பெற்றுக்கொண்டதில்லை. அப்போஸ்தலர்கள் ஒரு போதுமே இவ்வாறான வழிமுறைகளையும் கைக்கொள்ளவில்லை.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் பார்க்கும் செயல்களை, அப்புத்தகம் ஏன் எழுதப்பட்டது, எத்தகைய சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டது, என்றெல்லாம் ஆராயாமல், அன்றாட வாழ்க்கையில் அவை நடைபெறவேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவற்ற செயல். அப்போஸ்தலர் நடபடிகள், புதிய ஏற்பாட்டுக்காலத்து ஆதிசபையைக் கர்த்தர் எவ்வாறு எழுப்பினார் என்ற வரலாற்றுச் சம்பவத்தைத் தெரிவிக்கும் புத்தகம். அது வரலாற்றுப்புத்தகமாக இருந்தபோதும், நிச்சயமாக நாம் படித்தறியவும், வாழ்க்கையில் கைக்கொள்ளவும், வேண்டிய காரியங்கள், அதில் அநேகம் உண்டு. ஆனால், அப்புத்தகம் வரலாற்றில் நடந்ததைத் தெரிவிக்கின்றதென்பதை மறந்து அதில் காணப்படும் அனைத்தும் நிகழ் காலத்திலும் நடக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது வேதத்தைத்தவறான முறையில் பயன்படுத்தும் செயலாகும். *(மீதி அடுத்த இதழில்)*

# கேள்வி? - பதில்!




இச்சஞ்சிகை ஆசிரியரிடம் பொதுவாகக் கூட்டங்களில் பலர் கேட்ட முக்கியமான கேள்விகளையும் பதிலையும் ஏனையோரது பயன்கருதி இப்பகுதியில் வெளியிடுகிறோம்.

★ *கிறிஸ்தவன் இவ்வுலக வாழ்க்கையில் பின்வாங்கி இரட்சிப்பை இழந்து போகலாம் என்று கூறுகிறார்களே இது சரியா? எபிரேயர் 6:4-8 ஐ விளக்கவும்.*

○ வேதத்தின் ஒருசில பகுதிகளை மேலெழுந்த வாரியாக வாசிக்கும்போது, அவை கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்துபோகமுடியும் என்று பொருள் கொள்ளக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. குறிப்பாக எபிரேயர் 6:4-8; 10:26-27 ஆகிய வேதப் பகுதிகளை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வேதப்பகுதி களைக் கொண்டுதான் சிலர் கிறிஸ்தவன் இரட்சிப்பை இழந்து போகலாம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஆனால், விவரமாக இப் பகுதிகளை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது இதற்கு எதிர்மறையான விளக்கத்தை த்தான் பார்க்கிறோம். வேதம், கிருபையின் மூலம் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்ட எவரும் அதை இழந்து போகமாட்டார்கள் என்று தெளிவாகப் பல இடங்களில் போதிக்கின்றது. (யோவான் 6:35-40; 10:27-30; 17:11, 12, 15; ரோமர் 8:1, 29, 30, 35-39; 1 கொரிந்தியர் 1:7-9; எபேசியர் 1:5, 13, 14; 4:30; கொலோசெயர் 3:3, 4; 1 தெசலோ. 5:23, 24; எபிரேயர் 9:12, 15; 10:14; 1 பேதுரு 1:3-5; யூதா 24ப் பார்க்கவும்).

வேதத்தை வேதத்தோடு ஒப்பிட்டு விளக்கம் பெற வேண்டும் என்பதும், வேதம் தனக்கு முரணாக ஒரு போதுமே பேசாது எனபதும், தெளிவற்ற வேதப்பகுதி களைத் தெளிவான பகுதிகளைக் கொண்டே விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதும் திருமறையின் விளக்கத் திற்கு இன்றியமையாத விதிகள். இவ்விதிகள், வேதத்தைத் தவறான விதத்தில் புரிந்து கொள்ளக் கூடிய ஆபத்தில் இருந்து நம்மைப் பாதுகாக்கும். இவ் விதிகளைப்பயன்படுத்தி வேதத்தை ஆராய்கின்றபோது, திருமறையின் வேறெந்தப் பகுதியுமே இரட்சிப்பை ஒருவன் இழந்து போகலாம் என்ற போதனையைக் கொண்டிராததை நாம் அவதானிக்கலாம்.

அப்படியானால், இப்பகுதிகள் உண்மையிலேயே போதிப்பதென்ன? இப்பகுதிகள், கிறிஸ்தவர்களைப் போல் தோற்றமளித்த சிலரைப்பற்றி பேசுகின்றனவே தவிர உண்மைக் கிறிஸ்தவர்களைப்பற்றியல்ல. இவர்கள், ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களைப்போல் தோற்றமளித்து, தம்மில் ஆவிக்குரிய சில கிரியைகளை யும் கொண்டிருந்தபோதும், அவர்களில் தொடர்ந்து அவற்றைக் காண்பது அரிதாக இருந்தது. இவர்கள் மற்றவர்களோடு ஐக்கியத்தில் கூடிவருவதையும் முற்றாக நிறுத்தி விட்டார்கள் (10:24-25). இவ்வாறான வாழ்க்கையைக் குறித்து கிறிஸ்தவர்கள் எச்சரிக்கையாக இருக்கும்படி, இந்நிருபத்தின் ஆசிரியர் மேற்குறித்த வேதப்பகுதிகளில் சில உண்மைகளைத் தெரிவிக்கின்றார். அவர் கூறுவதென்னவென்றால், நற்செய்தியைக் கேட்கும் வாய்ப்பையும்பெற்று, பரிசுத்த ஆவியின் அருளினால் பல நல்ல காரியங்களை வாழ்வில் ருசி பார்த்தும், மனந்திருந்தி பாவத்திலிருந்து விடுபட்டுத் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களை, மனந்திரும்பச்செய்யும் பொருட்டு கர்த்தர் செய்யக்கூடியது வேறெதுவுமே இல்லை என்பதுதான் (மத்தேயு 7:22-23). இவர்கள் நற்செய்தியின் பேருண்மைகளை மனத்தளவில் புரிந்து கொண்டிருந்த போதும், கர்த்தருடைய கிருபையின மூலம், அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய மெய்யான விசுவாசத்தை நாடாமலும், பெறாமலும் இருந்தார்கள். இவர்களுடைய இருதயத்தில் பரிசுதத ஆவி, ஒரு போதுமே வல்லமையோடு கிரியை செய்யவில்லை. இத்தகையோரைக் குறித்துத்தான் இயேசு விதைக்கிறவனின் உவமையின் மூலமும் தெளிவு படுத்துகிறார் (மத்தேயு 13:39; 18-23). இவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்து கொண்டது போல் தோற்றமளித்தார்களே தவிர உண்மையில் அவரது மந்தையைச் சேர்ந்தவர்களல்ல. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக் காட்டிக்கொடுத்த யூதாசு, பவுல் அப்போஸ்தலனை விட்டுப்பிரிந்த தேமா (2 தீமோ. 4:10), தீமோத்தேயுவுக்கு எழுதிய நிருபத்தில் பவுல் குறிப்பிடும் இமெனேயு, அலெக்சந்தர் (1 தீமோ. 1:20) ஆகியோரை இவர்களுக்கு உதாரணமாகக் கூறலாம். ஆகவே, இவ்வேதப்பகுதி உண்மைக் கிறிஸ்தவர் களையல்ல, வெளித்தோற்றத்திற்கு அவ்வாறு தோற்றமளித்தவர்களைப்பற்றியே எடுத்துச்சொல்கிறது.


**திருமறைத்தீபம்**

மலர் 1 ஜனவரி 1995 இதழ் 1

காலாண்டிதழான 'திருமறைத்தீபம்' 'சவரின் கிரேஸ் சபையினால்' (Sovereign Grace Church) வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்: R. பாலா

முகவரி:

திருமறைத்தீபம்
த. பெட்டி எண் 62-159
சில்வியா பார்க்
ஆக்லாந்து
நியூசிலாந்து

The Bible Lamp
P. O. Box 62 - 159
Sylvia Park
Auckland
New Zealand

# புத்தக விமர்சனம்



**The Charismatics and the Word of God**
**(கெரிஸ்மெட்டிக்ஸும் கர்த்தருடைய வார்த்தையும்)**
**Victor Budgen**
**Evangelical Press, U.K 313 Pgs.,**

இங்கிலாந்து நாட்டில் லங்காசயர் என்ற இடத்தில் மின்றோ திருச்சபையின் போதகராகவிருந்த இப்புத்தக ஆசிரியர் கடந்த வருடம் இறைவனடி சேர்ந்தார். 'கெரிஸ்மெட்டிக்' இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, அதன் போதனைகள், குறித்து வரலாற்றுபூர்வமாகவும், திருமறையின் அடிப்படையிலும் ஆய்வுகள் புரிந்து தெளிவாகப் பலரும் பயன்படும்படி அவர் இப்புத்தகத்தை முதன்முறையாக 1985 இல் வெளியிட்டார். 'இவேஞ்சலிக்கள் பிரஸ்ஸினால்' 1989 ல் இதன் மறுபதிப்பு வெளியிடப்பட்டது.

இப்புத்தகம் ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருந்த போதும் இச்சஞ்சிகையை வாசிக்கும் ஆங்கிலம் தெரிந்த போதகர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் அன்பர்கள் நலன்கருதி இதன் விமர்சனத்தைத் தருகிறோம். உபயோகமற்ற குப்பைகளைப் பிரசுரித்து வரும் பல வெளியீட்டாளர்களுக்கு மத்தியில் இன்று 'பேனர் ஆப் ட்ருத்' (The Banner of Truth), இவெஞ்சலிக்கள் பிரஸ்' (Evangelical Press), ஆகிய புத்தக வெளியீட்டு நிறுவனங்கள், ஆங்கிலத்தில் தரமான, திருமறையின் அடிப்படையில் அமைந்த நூற்றுக்கணக்கான புத்தகங்களை வெளியிட்டு கிறிஸ்தவ அன்பர்களுக்கும், திருச்சபைக்கும் பேருதவி செய்து வருகிறார்கள். விக்டர் பஜ்ஜனின் (Victor Budgen) இப்புத்தகத்தை வெளியிட்ட 'இவெஞ்சலிக்கள் பிரஸ்' நிறுவனத்தாருக்கு எம் நன்றியை முதலாவது தெரிவித்துக்கொள்கிறோம்.

(இவ்விதழில் ஏற்கனவே 'கெரிஸ்மெட்டிக் இயக்கத்தைப்' பற்றி ஒரு கட்டுரை காணப்படுகின்றது. அக்கட்டுரை சுருக்கமானமுறையில் பலரும் பயனடைய எழுதப்பட்டுள்ளது.) ஆனால், விக்டர் பஜ்ஜன் இப்புத்தகத்தில், இவ்வியக்கத்தைப்பற்றிப் பல ஆய்வுகளோடுகூடிய தெளிவான விளக்கங்களைக் கொடுக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் வெளிப்படுத்தலோடு தொடர்புடைய அற்புத ஈவுகளை, தொடர்ந்தும் கர்த்தர் இக்காலத்தில் கொடுப்பதில்லை என்பதையும் இப்புத்தகம் தெளிவாக விளக்குகின்றது. அதற்கான தகுந்த பல ஆதாரங்களை ஆசிரியர் வேதத்தில் இருந்து அடுக்கடுக்காக எடுத்துத் தருகிறார்.

புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் எத்தகையது என்பதையும், அவற்றிற்கும், நாம் இன்று அவதானிக்கக் கூடிய போலித்தீர்க்கதரிசனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் புத்தக ஆசிரியர் மிகத்தெளிவாக விளக்குகிறார். இது ஆங்கிலம் தெரிந்த அனைவரும் தவறாது படிக்க வேண்டிய புத்தகம். போதகர்களும், ஊழியக்காரர்களும் மற்றோரும் இதைப்படிப்பதன் மூலம் நிச்சயமாக ஆவிக்குறிய வாழ்வில் பயன்பெறுவதோடு, தவறான போதனைகளிலிருந்தும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு**
*ஜான் ஓவன் (1616 - 1683)*
*தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள், சென்னை - 10*
*தமிழாக்கம் - W. H. கர்ட் 114 பக்கங்கள்*

ஜான் ஓவன் இங்கிலாந்து நாட்டைச்சேர்ந்த பியூரிட்டன் பிரிவைச்சேர்ந்த அருளுரையாளர். இவருடைய நூல்களின் பெரும்பகுதி 16 புத்தகங்களாக வெளியிடப்பட்டு இன்றும் ஆங்கிலத்தில் பதிப்பிலிருக்கின்றன. இவர் 1647 ஆம் ஆண்டில் வெளியிட்ட மிகப் புகழ் பெற்ற 'The Death of Death in The Death of Christ' என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமே இப்புத்தகம். ஜிம் பெக்கர் (J.I.Packer) என்ற ஆங்கில இறையியலாளர், ஆங்கிலத்திலே இப் புத்தகத்திற்கு 25 பக்கங்கள் கொண்ட ஒரு அருமையான முன்னுரையை எழுதியுள்ளார். இதன் தமிழாக்கத்தைக் கூடிய விரைவில் 'திருமறைத்தீபத்தில்' தரவிருக்கிறோம்.

இதை எழுதத்தூண்டியது எது, எதைப்பற்றியது இந்நூல் என்று ஆரம்பத்தில் விளக்குகிற ஜான் ஓவன், இதைக்குறித்து ஏழு ஆண்டுகள் தியானத்தோடு படித்த பின்பே, இதை எழுத முற்பட்டதாகக் கூறுகிறார். இந்நூல், கிறிஸ்து எல்லா மனிதரையும் பாவத்திலிருந்து விடுவிக்க மரித்தாரா? அல்லது அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட மக்களுக்காக மட்டுமே

## வரப்போகும் இதழ்களில்

**'திருபையின் போதனைகள்' என்றால் என்ன ?**

**கர்த்தரால் கட்டியெழுப்பப்படும் திருச்சபை**

**'சீர்திருத்த பாப்திஸ்து' என்றால் என்ன ?**

**திருபையின் அடையாளங்கள்**

**கர்த்தருடைய சித்தத்தை அறிந்து கொள்வதெப்படி ?**

மரித்தாரா? என்ற வினாக்களுக்கு விடையளிக்கின்றது. கிறிஸ்தவர்கள் இன்று இதில் கருத்துவேறுபாடுள்ளவர் களாக இருக்கிறார்கள். சிலர் இதைக்குறித்து முடிவெடுக்க வேண்டியதே அவசியமில்லை என்று கருதுகிறார்கள். ஆனால், கர்த்தருடைய வார்த்தை தெளிவாகப் போதிக்கும் எந்த ஒரு காரியத்தையும் அப்படி சுலபமாக அலட்சியப்படுத்திவிட முடியாது.

கி. பி 350-ல் பெலேஜியஸ் எனற ஆங்கிலேயத் துறவி 'கிறிஸ்துவின் மரணம் யாவருக்கும் உரியது என்ற கருத்தைப் போதித்தார்'. பின்பு கி. பி. 1560-ல் பிறந்த ஆர்மீனியஸ் என்ற டச்சு இறையியலாளரும் இதையே போதித்தார். ஆனால், கி. பி 4-ம் நூற்றாண்டில் அகஸ்டினும், பின்பு, திருச்சபை சீர்திருத்தக் காலத்தில் லூத்தரும், ஜான் கல்வினும், 'கடவுள் தேர்ந்தெடுத்த, குறிப்பிட்ட மக்களுக்காகவே கிறிஸ்து மரித்தார்' என்று போதித்தனர். கிறிஸ்து, எல்லோருக் காகவும் மரித்திருந்தால், அவரது வல்லமையுள்ள செயலின் அடிப்படையில் அனைவருமே பரலோகத் திற்கு நிச்சயமாக சென்றுவிட முடியும். ஆனால், எல்லோருமே பரலோகத்திற்கு சென்றுவிட முடியாத படி, சிலரை அவர்களுடைய பாவம் தடை செய்கிறது என்றும் வேதம் போதிக்கின்றது. இப்போதனைகளை சரியாகப்புரிந்து கொள்ளாமல் எவருமே உண்மை யோடும், உறுதியோடும் நற்செய்தியைப் பிரசங்கிக்க முடியாது. இதைப்புரிந்துகொள்ளத்தவறியதால்தான் இன்று அநேகர் நற்செய்தியை வேதத்திற்கே முரணான முறையில் பிரசங்கிப்பதோடு, அதைக்கேட்க வருபவர்க ளையும் எவ்வாறாவது கர்த்தரிடத்தில் கொண்டு வந்து விடவேண்டுமேன்ற ஆவலில் தவறான வழிமுறை களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வேதத்தில் இயேசு கிறிஸ்துவின் நற்செய்திக்கே அடித்தளமாக அமைந்திருக்கும் கிறிஸ்துவின் மரண த்தைக்குறித்த தெளிவான போதனைகளை நாம் புரிந்து கொள்ள உதவுமுகமாகத்தான் ஜான் ஓவன் இந்நூலை எழுதினார்.

இந்நூல் நான்கு பிரிவுகளைக் கொண்டது. முதலாவது பகுதி, கடவுள் இயேசு கிறிஸ்துவை மரிப் பதற்காக அனுப்பிய நோக்கத்தையும், இரண்டாம் பகுதி, கிறிஸ்துவின் மரணத்தின் உள்நோக்கத்தையும், இதன் மூன்றாம் பகுதி, எல்லா மனிதரையும் மீட்க கிறிஸ்து மரிக்கவில்லை என்பதை நிரூபிக்கும் பதினாறு காரணங்களையும், நான்காம் பகுதி, மக்கள் யாவரையும் மீட்க கிறிஸ்து மரித்தார் என்ற வாதத்திற்கு எதிரான காரணங்களையும் தருகின்றன.

சிந்தனையை அநாவசியமாக சிறகடித்துப் பறக்க விடாது, அடுக்கடுக்காக வேத வசனங்களை மட்டும்தந்து, திருமறைக்குட்பட்டு, மீட்பின் விலைக் கிரயமான, கிறிஸ்துவின் மரணத்தின் பெருநோக்கத்தை ஓவன் தெளிவுபடுத்துகிறார். இதைக்குறித்து ஓவன் சொல்வதைக் கேளுங்கள், 'கருத்து வேறுபாடுகளில் ஈடுபடுவதை நான் சிறிதும் விரும்புவதில்லை. ஆனால், 'கடவுளுடைய மக்களிடம் எல்லாக் காலத்திற்குமென ஒப்படைக்கப்பட்ட கோட்பாட்டில் திரிபு ஏற்படாமல் பாதுகாக்க நீங்கள் போராட வேண்டுமென்று' திருமறை கூறுகின்றது (யூதா 3). எனவே இந்தப்புத்தகத்தை நீங்கள் கருத்துடன் வாசிக்க வேண்டுகிறேன்.' 'திருமறைத்தீபம்' மூலம் வாசகர்களுக்கு இந்நூலை சிபாரிசு செய்வதில் நாம் பெருமிதமடைகிறோம்.

# மெய்யான ஐக்கியம்

***C. H. ஸ்பர்ஜன்***

இக்காலத்தில் ஐக்கியத்தைப்பற்றி பெரிதாக பேசப்பட்டு வருகிறது. திருச்சபைகள் கூடிவருவதற்குத் தடையாக இருக்கும் சுவர்களனைத்தையும் இடிக்கவேண்டும், சமயக்கிளைகளனைத்தையும் ஒன்று சேர்க்கவேண்டும் என்றும் பேசிவருகிறார்கள். ஐக்கியத்தைக்குறித்து நாம் இந்தவிதத்தில் சிந்திக்கக்கூடாது. நம்மால் விரும்பப்படுவதும் அல்லது இயலக்கூடியதுமான ஒரே ஐக்கியம், இயேசு கிறிஸ்துவின் பாதத்தினடியில் நாமனைவரும் ஒன்று கூடிவருவதுதான். சத்தியத்தை எற்றுக்கொண்டு, அதற்கு எதிரானவைகளையும் நம்மத்தியில் நாம் அனுமதித்தால் அது இயற்கைக்கே விரோதமானதாகும். அத்தோடு, அது கிறிஸ்துவுக்கு எதிரான நம்பிக்கைத்துரோகமுமாகும். போலித்தனமான அன்பின் பெயரில், கர்த்தருடைய சத்தியத்தில் ஓர் அணுவளவையும் விட்டுக்கொடுக்க நமக்கு அதிகாரமில்லை. சத்தியம் நமக்குச்சொந்தமான பொருளல்ல. நாம் அதன் காவலர்கள் மட்டுமே. ஆகவே, நம்மை நம்பிக்கொடுக்கப்பட்டதை நாம் விசுவாசத்தோடு பாதுகாக்க வேண்டும். எந்த ஒரு சபைக்கும் அதன் மெய்யான சாட்சியை இம்மியளவும் குறைவுபடுத்தக்கூடிய அதிகாரம் இல்லை. கிறிஸ்துவின் கட்டளைப்புத்தகத்தை மாற்ற முயல்வது தெய்வ நிந்தனைக்குரிய காரியம். அனைத்து சபைகளும் கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்கிறபோதே, அவர்கள் மத்தியில் மெய்யான ஐக்கியம் ஏற்படுகின்றது, ஏனெனில், கிறிஸ்து ஒன்றுக்கொன்று முரணான இரு காரியங்களைப்பற்றி எப்போதுமே போதித்ததில்லை. வேதத்தில் இருவிதமான திருமுழுக்குகள் காணப்படுவதில்லை. ஒன்றுக்கொன்று முரணான இருவிதமான சமயக்கோட்பாடுகளும் காணப்படுவதில்லை. மனிதனால் ஏற்படுத்தப்படும் காரியங்களைனைத்தையும் கைவிட்டு, நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடையவைகளை மட்டும் உறுதியோடு கடைப்பிடித்தால்தான் கோட் பாட்டிலும், போதனைகளிலும் ஐக்கியப்படமுடியும்.

***(இங்கிலாந்து நாட்டில் 'மெட்ரபோலிட்டன் டெபர்நேக்கள்' என்ற சபையின் போதகராக இருந்த மகா பிரசங்கியான ஸ்பர்ஜன் (1834 - 1892) ஒரு பிரசங்கத்தில் (1871 இல்) சபை ஐக்கியத்தைக்குறித்து பேசிய பகுதி. பலர், போலியான ஐக்கியத்தைத் தேடி அலையும் இன்றைய சூழ்நிலையில் இவ்வாலோசனை நிச்சயம் அவசியம்)***

***இவ்வித‌ழில் 'கெரிஸ்மெட்டிக் இயக்கம்' பற்றிய ஆய்வுக்கணிப்பின் முதற் பாகம் வெளிவருகிறது. அடுத்த இதழில் அதன் இறுதிப்பாகம் வெளிவரும். உங்கள் பிரதிக்கு எழுதுங்கள்.***

(முதல் பக்கமிருந்து)

**1. கடவுள் வரலாற்றின் மூலம் செயல்படுகிறவராய் இருக்கிறார்.** வேதம் நாம் எவ்வாறு வாழ வேண்டும் என்று போதிக்கின்ற கடவுளுடைய வார்த்தையாய் இருக்கின்றது. எது சரி, எது பிழை, என்று எடுத்துச்சொல்கின்ற பல உதாரணங்களை நாம் வேதத்தில் பார்க்கிறோம். அதுமட்டுமன்றி, கடவுள் எவ்வாறு எல்லாக் காரியங்களையும் தன் மகிமைக்காகவே நிறைவேற்றிக்கொள்கிறார் என்றும் வேதம் தெரிவிக்கின்றது. கர்த்தருடைய கிரியைகளே, அவருடைய பிள்ளைகளின் வரலாறாக வேதத்தில் அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். எந்தளவு திருச்சபை வரலாற்று அறிவில் நாம் வளருகிறோமோ, அந்தளவிற்கு கர்த்தருடைய அறிவிலும் நாம் வளர்கிறவர்களாய் இருப்போம்.

**2. கிறிஸ்தவர்கள் எக்காலத்திலும் ஒரே விதமான பிரச்சனைகளையே சந்திக்கிறார்கள் என்பதை வரலாறு நிருபிக்கின்றது.** இவ்வுலகம் தொடர்ந்து திருச்சபையை வெறுக்கிறது. திருச்சபையில் சமாதானம் நிலவும் காலங்களிலும், அதற்கு எதிர்ப்பு ஏற்படுகின்றபோதும், சாத்தான் தனது திட்டங்களின் மூலமாக எம்மைத் தவறான வழிக்குள் இட்டுச்செல்லப் பார்க்கிறான். தவறான போதனைகளும், ஒழுக்கக்குறைவும் கிறிஸ்தவ சபை வாழ்க்கைக்குப் புதிதானதல்ல. நாம் இக்காலங்களில் சந்திக்கும் அனைத்துக் கள்ளப்போதனைகளையும் திருச்சபை வரலாற்றிலும் காணமுடிகின்றது. வேதம் இந்தக்கள்ளப்போதனைகளைக்குறித்து எம்மைத் தொடர்ந்து எச்சரிப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இக் கள்ளப்போதனைகள் நம்மை அசைக்க முடியாது என்று நினைத்தால், நாம் பெருந்தவறு செய்தவர்களாவோம். கள்ளப்போதனைகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள திருச்சபை வாலாறு பெரிதும் உதவுகிறது.

**3. வரலாற்றில் நமக்குரிய இடத்தைப்பற்றி நாம் அவசியம் அறிந்திருக்க வேண்டும்.** வேதம், நாமனைவரும் 'புதிய உடன்படிக்கை'யின் காலப்பகுதியில் வாழ்ந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறது. அதாவது, கடவுள், கிறிஸ்துவோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, எல்லாவிதமான எதிர்ப்புகளுக்கும் மத்தியில் நற்செய்தியை, உலகமெங்கும் இக்காலத்தில் பரப்பி வருகிறார். அதேவேளை, தேவன் எக்காலத்திலும் தனக்கென்று ஓர் மக்களைக் கொண்டிருக்கிறார் என்ற உண்மையையும் வேதம் வெளிப்படுத்துகிறது. இதை திருச்சபை வரலாறும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. நாம் மட்டும் கர்த்தரை அறிந்து கொண்டிருக்கும்போது மற்றவர்கள் ஏன் அவரை அறிந்துகொள்வதில்லை? வேதத்தால் ஒருகாலத்தில், உருவாக்கப்பட்டு, எழுச்சிபெற்ற நாடுகளில் நற்செய்தி ஊழியம் வளராத நேரத்தில், 'மூன்றாம் உலகநாடுகளில்' மட்டும் அது பெருவளர்ச்சியடையும் காரணம் என்ன? திருச்சபை வரலாற்றின் அறிவைக்கொண்டே இக்கேள்விகளுக்கு சரியானமுறையில் பதில் அளிக்கமுடியும்.

**4. திருச்சபை வரலாறுபற்றிய அறிவு, நமது விசுவாசத்தையும், திருமறையின் போதனைகளையும், உறுதிப்படுத்துவதோடு, அவற்றிற்குப் பாதுகாப்பாகவும் இருக்கின்றது.** இயேசு கிறிஸ்துவில் நமக்கிருக்கும் விசுவாசம் சரித்திரபூர்வமான விசுவாசம். நமது வேத சத்தியங்கள் காளான்களைப்போல் இவ்வுலகில் திடீரெனத் தோன்றியவையல்ல. நாம் விசுவாசிக்கும் அதே சத்தியங்களையும், போதனைகளையும் பின்பற்றியதோடு அவற்றிற்காகத் தம் உயிரையும்கூடத் தியாகம் செய்துள்ள அநேகரை நாம் திருச்சபை வரலாற்றில் சந்திக்கிறோம். நம்முதாதையர்கள் தொடக்கமுதல், நாம் விசுவாசிக்கும் அதே விசுவாசத்தையும், போதனைகளையுமே கொண்டிருந்ததற்கு திருச்சபை வரலாறு சாட்சி பகருகின்றது. இன்று எம்மத்தியில் கிறிஸ்துவின் பெயரில் காணப்படும் பல சமயக்கிளைகளும் 'குழுக்களும்' இப்பெருமையைச்சாற்ற முடியாது.

அதுமட்டுமல்லாமல், திருச்சபை வரலாறு எமது விசுவாசத்திற்குப் பாதுகாப்பாக இருக்கிறது. எமது அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ தவறான போதனைகளைப் பின்பற்றுபவர்களை நாம் சந்திக்கிறோம். வரலாற்றினால் சாட்சி பகரப்படும் எமது விசுவாசத்தைக் கொண்டு, இவர்கள் வேத அறிவிலும், விசுவாச வாழ்க்கையிலும், எங்கே தவறிழைக்கிறார்கள் என்று எம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. திருச்சபை வரலாற்றின் அறிவையும், வேதத்தின் போதனைகளையும் பயன்படுத்தி, தவறான போதனைகளை நாம் இனங்கண்டுகொள்ள முடிவதோடு, அவற்றிலிருந்து நம்மை நாம் காத்துக்கொள்ளவும் முடிகின்றது.

**5. திருச்சபை வரலாற்று அறிவு, நாம் நற்செய்தி ஊழியத்திலும், மிசனரி ஊழியத்திலும், அறிவு பூர்வமான ஊக்கத்தோடு ஈடுபட உதவும்.** திருச்சபை வரலாறு, மார்டின் லூதர், ஜோன் கல்வின், ஜோன் நொக்ஸ், ஜோர்ஜ் விட்பீல்ட் போன்றவர்களின் அயராத, தளராத ஊழியங்களையும், சார்ள்ஸ் ஸ்பர்ஜன் போன்றோரின் பேரூழியங்களையும், வில்லியம் கேரி, டேவிட் பிரெய்நாட் போன்றோரின் ஊக்கத்தோடுகூடிய திருப்பணிகளையும் எடுத்துரைக்கின்றது. இவர்களனைவரும் திருச்சபை வரலாற்றிற்கு தம் வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுத்ததோடு, அதனால் உந்தப்பட்டு ஊழியத்திற்கும் தம்மை ஒப்புக்கொடுத்தவர்கள்.

வில்லியம் கேரி, திருப்பணி ஊழியத்தில் தனக்கிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தி எழுதிய 'விசாரணை' என்ற எண்பத்தைந்து பக்கங்கள் கொண்ட புத்தகத்தில், திருச்சபையின் வரலாற்றிலே எவ்வாறு அநேகர் இவ்வூழியத்தில் ஈடுபட்டு கர்த்தரை மகிமைபடுத்தினர் என்பதையும், தாம் எவ்வாறு அவர்களுடைய வரலாற்றின் மூலம் உந்தப்பட்டு ஊழியத்தில் ஈடுபட நேர்ந்தது என்பதையும் தெரிவிக்கிறார். திருச்சபை வரலாற்றிலே கேரி அவதானித்த, பலருடைய வாழ்க்கைச் சரிதம் அவருக்குப் பேருதவி புரிந்தது.

**6. திருச்சபை வரலாற்றில் நாம் பெறும் அறிவு, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நம்மைக் கர்த்தரிலேயே தங்கியிருக்கும்படி செய்யும்.** 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த சார்ள்ஸ் பினி (Charles Finney) என்ற அமெரிக்க நற்செய்திப் பிரசங்கியார் நம் சந்ததிக்கு ஒரு பெருந்தவறான வழியைக் காட்டித்தந்தார். கர்த்தரிடம் இருந்து வரும் எல்லா ஆசீர்வாதங்களையும் மனிதன் தன் சுயமுயற்சியால் பெற்று அனுபவிக்க முடியும் என்று சார்ள்ஸ் பினி போதித்தார். இதற்கான சில வழி முறைகளையும் இவர் வகுத்து புத்தகமாக வெளியிட்டார். இன்று நாம் நற்செய்தி ஊழியத்தில் அவதானிக்கக்கூடிய, வேதப்போதனைகளுக்குப் புறம்பான, பல செயல்களுக்கு இம்மனிதனே வித்திட்டார். திருச்சபை வரலாற்றை சரியான முறையில் படித்து நாம் பெறக்கூடிய அறிவு, எல்லாவற்றிற்கும் நாம் கர்த்தரிலேயே தங்கியிருக்க வேண்டும் என்ற தாழ்மை உணர்வை நமக்குள் ஏற்படுத்தும். திருச்சபை வளர்ச்சி, மனிதனுடைய சுய முயற்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்ற உண்மையை வரலாறு தெளிவாகப் போதிக்கின்றது.